# அரசியலமைப்பின் செயலாற்றுகைத் தொடர்பான மதிப்பீடு: தேசிய கருத்துக் கணிப்பு




சோஷல் இன்டிகேட்டர் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

Friedrich Naumann Foundation for Freedom (FNF) Sri Lanka



நவம்பர் 2021

# அறிமுகம்

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அடைந்த வெற்றியானது பாராளுமன்றத்தில் ஒரு பாரிய பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதற்கும், முன்னைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சீர்திருத்தங்களை விலக்கிக் கொள்வதற்கும் ராஜபக்ஷக்களுக்கு வழியமைத்துக் கொடுத்தது. 2020ஆம் ஆண்டு அக்டோபர் 22ஆம் திகதி சட்டமாக நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 20ஆவது சீர்திருத்தமானது ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தியதுடன், நாட்டில் ஜனநாயக வாய்ப்புக்கள் மேலும் முடக்கப்படும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தியது. மேலும், தொற்றுநோய்ப் பரவல் மற்றும் அதனுடனான வரையறைகள் என்பன எதேச்சாதிகார ஆட்சியை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் சிவில் விவகாரங்கள் மீதான தீவிர இராணுவமயப்படுத்தல் மூலம் அதனை தக்கவைத்துக் கொள்வதற்கும் ஆட்சியாளர்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியது.

அரசியலமைப்பில் மேலும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்களின் பின்னணியில் இந்த கணிப்பீட்டாய்வு நடத்தப்பட்டது. தற்போதைய அரசியலமைப்பு, அரசியல் ஒழுங்கின் இயல்பு, ஜனாதிபதி பதவி, பொருளாதாரத்தின் இயல்பு, மனித உரிமைகள் மற்றும் நீதித் துறை என்பன தொடர்பாக பொதுமக்களின் அறிவு, மனப்பாங்குகள் மற்றும் அபிப்பிராயம் என்பவற்றை மதிப்பிடும் நோக்கத்துடன் இந்த நாடளாவிய ரீதியிலான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கணிப்பீட்டாய்வு அலகான சோஷல் இன்டிகேட்டரினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சோஷல் இன்டிகேட்டர் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் பரந்த வீச்சிலான சமூக, பொருளாதார விடயங்கள் தொடர்பான கருத்துக் கணிப்புக்களை நடத்தி வருகின்றது. இந்த ஆய்வுக் குழுவில் கலாநிதி பிரதீப் பீரிஸ், சகினா மொய்னுதீன் மற்றும் மா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உள்ளனர். நாட்டில் இத்தகைய இயல்பிலான ஆய்வொன்றை நடத்துவதற்கு தமது ஆதரவை வழங்கிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (CPA) மற்றும் Naumann Foundation for Freedom (FNF) Sri Lanka வின் ஹுபர்டஸ் வான் வெல்க் (Hubertus von Welck) மற்றும் அணியினருக்கும் சோஷல் இன்டிகேட்டர் நன்றி தெரிவிக்கின்றது.

# முறைமையியல்

இந்த கணிப்பீட்டாய்வு பகுதியாக கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தொன்றை பயன்படுத்தி நடத்தப்பட்டது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் நான்கு பிரதான இனத்துவ சமூகங்களையும் (சிங்களவர், தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள்) சேர்ந்த 936 மாதிரி பதிலளிப்பவர்களுடன் இந்த வினாக்கொத்தைப் பயன்படுத்தி, நேரடியான நேர்காணல்கள் நடத்தப்பட்டன. மாதிரியின் எண்ணிக்கையானது சம்பந்தப்பட்ட மாவட்ட மற்றும் இன ரீதியான குடித்தொகையினை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

ஆய்வுக்கான வெளிக்களப்பணி 2021 ஏப்ரல் 25ஆம் திகதி தொடக்கம் யூலை 31ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டது. சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய பிரதான இனத்துவச் சமூகங்களைச் சேர்ந்த மொத்தம் 66 வெளிக்கள ஆய்வாளர்கள் தரவு சேகரிப்பில் பங்குபற்றினர். பதிலளிப்பவர்கள் மற்றும் வெளிக்கள ஆய்வாளர்கள் ஆகியோரின் முதல் மொழியிலேயே நேர்காணல்கள் நடத்தப்பட்டன.

தொற்றுநோய்ப் பரவலுடன் தொடர்பான வரையறைகளை கவனத்தில் கொண்டு சிரேஷ்ட வெளிக்கள மேற்பார்வையாளர்களுக்கான விளக்கமளித்தல் zoom ஊடாக மேற்கொள்ளப்பட்டது. வெளிக்கள ஆய்வாளர்களுக்கான பயிற்சியானது, சிரேஷ்ட வெளிக்கள மேற்பார்வையாளர்களினால், நேரடியாக அந்தந்த மாவட்டங்களில், சோஷல் இன்டிகேட்டரின் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி அமர்விலும் ஆகக்கூடியது மூன்று வெளிக்கள ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

வெளிக்களப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த ஆய்வு, வினாக்கொத்து மற்றும் வெளிக்கள நுட்பங்கள் என்பன தொடர்பான விரிவான பயிற்சிகள் வெளிக்கள ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டன. சேகரிக்கப்படும் தரவுகளின் தரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு மாதிரியின் 10% மீள்பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டத்தினதும் இனத்தினதும் உண்மையான விகிதாசாரத்தினை பிரதிபலிக்கச் செய்யும் பொருட்டு தரவு மதிப்பேற்றம் செய்யப்பட்டது. சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் பொதியை (SPSS) பயன்படுத்தி, தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# நிறைவேற்று சாராம்சம்

- அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக, சுமார் 44% பதிலளிப்பவர்கள் தேவையான ஒரு சில மாற்றங்களுடன் தற்போதைய அரசியலமைப்பு தொடர்ந்து இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றனர். அதேவேளை, பதிலளித்தவர்களில் சுமார் 35% பதிலளிப்பவர்கள் ஒரு புதிய அரசியலமைப்பு தேவையென குறிப்பிடுகின்றனர்.
- புதிய அரசியலமைப்பில் அல்லது அரசியல் மறுசீரமைப்பில் முன்வைக்கப்படும் வரைவில் உள்ளடக்கப்பட வேண்டுமென பதிலளிப்பவர்கள் எதிர்பார்க்கும் மிக முக்கியமான மூன்று காரணிகளாவன - அது அனைத்து மக்களுக்குமான பொருளாதார செழிப்பு நிலையை உறுதிப்படுத்த வேண்டும் (48.1%)இ அது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த / பலப்படுத்த வேண்டும் (24.4%) மற்றும் அது ஒரு பன்மைத்துவ சமூகத்தை உறுதிப்படுத்த வேண்டும் (11%) என்பனவாகும்.
- புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான தகவல்களை மக்களுக்குத் தெரிவிக்கும் விடயத்தில் அரசாங்கம் ஓரளவுக்கு வெற்றிகரமாக செயற்பட்டு வந்துள்ளது என 37.3% பதிலளிப்பவர்கள் தெரிவிக்கும் அதேவேளை, அந்த விடயத்தில் அரசாங்கம் வெற்றியீட்டியிருக்கவில்லை என 36% பதிலளிப்பவர்கள் குறிப்பிடுகின்றனர்.
- தேர்தல் கோட்பாடு தொடர்பாக அமோகமான ஆதரவு (97.6%) இருக்கின்ற போதிலும், பாராளுமன்றத்துடனான கலந்தாலோசனை இன்றி அல்லது தேர்தல்கள் குறித்து கவலைப்படாது முடிவுகளை எடுக்கக்கூடிய மற்றும் ஆட்சி நடாத்தும் ஒரு தலைமைத்துவத்திற்கு பதிலளிப்பவர்கள் பெரும்பாலானவர்கள் ஆதரவு தெரிவிக்கின்றமை நிறைவேற்றதிகார ஆட்சி முறை ஒன்றுக்கு கணிசமான அளவிலான ஆதரவு இருப்பது தெரியவருகிறது.
- இலங்கையில் ஜனநாயகம் செயற்படும் விதம் குறித்து தாம் திருப்தி அடைவதாக பெரும்பாலானவர்கள் (53.9%) குறிப்பிடுகின்ற போதிலும், பதிலளிப்பவர்களில் குறிப்பிடத்தக்க அளவினர் (42.6%) தாம் அதிருப்தி அடைவதாக கூறுகின்றனர்.
- நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக ஒழிக்கப்பட வேண்டுமென பதிலளிப்பவர்களில் சுமார் 40மூ தெரிவிக்கும் அதேவேளை, பதிலளிப்பவர்களில் 47% ஏதோ வடிவிலான நிறைவேற்று ஜனாதிபதி முறை இருக்கவேண்டுமெனக் கூறுகின்றனர்.
- ஜனாதிபதிக்கு சிவில் அல்லது குற்றவியல் வழக்குகளிலிருந்து விலக்குரிமையை வழங்கக் கூடாது என பதிலளிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் (66.7%) நம்புகின்றனர்.
- புதிலளிப்பவர்களில் ஓரளவு பெரும்பாலானவர்கள் (53.5%) மக்கள் பிரதிநிதிகள் தமது இனம் மற்றும் சமயத்தை பிரதிநிதித்துவம் செய்வது முக்கியமானது என தெரிவிக்கின்றனர். இந்த உணர்வை முஸ்லிம் (71.2%) மற்றும் தமிழ் (51%) சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பவர்கள் பெருமளவு கொண்டிருக்கின்றனர்.
- நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன பராமரிக்கப்பட்ட விதம் குறித்து தாம் அதிருப்தி அடைவதாக பதிலளிப்பவர்களில் கணிசமான ஒரு விகிதத்தினர் (47.3%) கூறுகின்றனர்.
- நீதித் துறையின் நடைமுறை தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்கையில், பொருளாதார ரீதியில் வறிய பின்னணியைக் கொண்ட ஒருவர் (57.4%), சிறுபான்மை சமயக் குழுவை (52.4%) சேர்ந்த ஒருவர் அல்லது சிறுபான்மை இனக் குழுவை (53.6%) சேர்ந்த ஒருவர் ஒரு குற்றச் செயல் அல்லது ஊழல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருப்பார் எனின் அவர் நீதித் துறையினால் நியாயமற்ற விதத்தில் நடத்தப்படுவார் எனக் குறிப்பிடுகின்றனர்.